தேதி.26.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 74/2022 திரு.மயில்சாமி வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் நான், எனது அப்பாவும் குடியிருந்து வருகிறோம். 2ம் பிரதிவாதி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் என் தந்தையுடன் குடியிருந்து வருகிறார்கள். வழக்கு தாக்கல் செய்யும் போது வீட்டின் மதிப்பீடு செய்து தான் தாக்கல் செய்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வீட்டை மதிப்பீடு செய்யாமல் வேண்டுமென்றே குறைத்து மதிப்பீடு செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்றும், நான் விளம்புகை பரிகாரம் கோர எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சட்டப்படி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.<br><br>சார்பு நீதிபதி,<br>சத்தியமங்கலம். |